2. அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள், ஒன்றன்பின் ஒன்றாக நான்கு தீர்மானங்கள் உள்ளன. மதிப்பீட்டுக் குழு பற்றிய தீர்மானத்தை மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் லீடர் ஆஃப் தி ஹௌஸ், கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டசபை விதிகளைச் சேர்ந்த 164-வது விதியின்கீழ், 1967-68-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை, மதிப்பிற்குரிய சபாநாயகர் நிச்சயிக்கும் தேதியன்று இச்சபை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை நிறைவேற்றுவதா இல்லையா என்பது அவை முன் வைக்கப்பட்டுள்ள கேள்வி. இதுபற்றி விதிகளின்படி குரல் வாயிலாக உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறவர்கள் குரல் வாயிலாக "ஆம்" என்று கூறலாம். ('ஆம்' என்ற குரல்கள்.) தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் இருந்தால் 'இல்லை' என்று சொல்லுங்கள். 'இல்லை' என்பவர்கள் இல்லை. எனவே மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவிக்கின்றேன்.

3. அறிவிப்புக்கள்.

(அ) மதிப்பீட்டுக்குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 23—3—1967 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25—3—1967 சனிக்கிழமை மூன்று மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கை அதாவது பதினைந்துக்கு மேற்படுமாயின் 27—3—1967 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.